பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

26 10 2024 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
2. தூய்மை இந்தியா இயக்கம் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.
3. மதுரையில் பெய்த கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

[]<<<>>>[]

தூய்மை இந்தியா இயக்கம் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பிரமர் திரு நரேந்திரமோடி மேற்கொண்ட முயற்சியின் காரணமாக இந்த இயக்கத்தில் மக்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளதாக கூறினார்.

தூய்மை இந்தியா இயக்கம் தற்போது நாடு முழுவதும் மக்களின் பங்களிப்புடன் மிக சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் திரு எல் முருகன் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் குறித்து முதலமைச்சர் திரு மு க ஸ்டாலினுடன், மத்திய மத்திய நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு மனோகர்லால் கட்டார் இன்று சென்னையில் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையின்போது சென்னை புறநகர் பகுதிகளான விமான நிலையம் முதல் – கிளாம்பாக்கம் வரையிலான வழித்தடத்திற்கும், இரண்டாம் கட்ட நகரங்களான கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் மெட்ரோல் ரயில் திட்டத்தை செயல்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சென்னையில் நடைபெற்று வரும் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் நிறைவடைந்து செயல்பாட்டுக்கு வரும்போது மொத்தம் 172 கிலோமீட்டர் தொலைவுக்கு மெட்ரோ ரயில் கட்டமைப்பு இருக்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

மதுரையில் பெய்த கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், மீட்பு மற்றும் நிவாரண பணிகளை மாநில அமைச்சர்கள் திரு மூர்த்தி, திரு பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் நேரடியாக கண்காணித்து வருவதாக கூறியுள்ளார்.

குடியிருப்புப் பகுதிகளில் சூழ்ந்துள்ள மழைநீரை அகற்றுவதற்கான நடவடிக்கைகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.,

நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் மருத்துவ முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதகாவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மதுரை மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் இயல்பு நிலையை கொண்டு வருவதற்குத் தேவையான அனைத்து பணிகளும் விரைந்து மேற்கொள்ளப்படுவதாக திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதனிடையே பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு செய்த மாநில அமைச்சர் திரு மூர்த்தி பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், அனைத்துதுறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - மூர்த்தி ) --- 23 செகண்ட்*

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக பெய்து வரும் கனமழையை அடுத்து கோதையாறு, பரளியாறு, தாமிரபரணி உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனிடையே மாவட்த்தில் விட்டு விட்டு சாரல் மழையும் அவ்வப்போது கனமழையும் தொடர்ந்து பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பேச்சிப்பாறை அணையிலிருந்து உபரி நீர் திறந்துவிடப்பட்டுள்ளதை அடுத்து ஆற்றின் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு ஆட்சியர் திருமதி அழகுமீனா கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

இதனிடையே தமிழகத்தில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

அடுத்த 24 மணி நேரத்தில் தென்தமிழகம் மற்றும் வடதமிழகத்தின் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) ---25 செகண்ட்*

**[]<<<>>>[]**

கூட்டுறவுத் துறை மூலம் நடத்தப்பட்டு வரும் மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் கூட்டுறவு கொண்டாட்டம் என்ற பெயரில் மளிகைப் பொருட்கள் அடங்கிய தீபாவளி சிறப்பு தொகுப்பு வரும் திங்கட்கிழமை முதல் விற்பனை செய்யப்படும் என்று மாநில அமைச்சர் திரு பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இந்த மளிகைப் பொருட்கள் அடங்கிய சிறப்பு தொகுப்பு பிரிமியம் மற்றும் எலைட் என்று இரண்டு வகைகளில் அறிமுகப்படுத்தப்படுவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பிரிமியம் தொகுப்பில் 14 வகையான மளிகைப் பொருட ்கள் 199 ரூபாய்க்கும், எலைட் தொகுப்புக்கு 299 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலங்களில் பலகாரங்கள் செய்வதற்கான ஐந்து வகையான பொருட்கள் அடங்கிய அதிரசம் - முறுக்கு காம்ப்போ 190 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பயனடையும் வகையில் குறைந்த விலையில் கூட்டுறவு பண்டகசாலைகளில் விற்பனை செய்ய ஏற்படாடு செய்யப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டள்ளது.

**[]<<<>>>[]**

கைத்தறி தொழிலை பாதுகாக்கவும், நெசவாளர்களின் நலனை மேம்படுத்தவும் மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு ஆர் காந்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பத்து ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்து வரும் தற்காலிக பணியாளர்கள் 405 பேர் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

நெசவாளர்களுக்கு மருத்துவ காப்பீட்டுத் திட்டம், இலவச மின்சாரம், கூட்டுறவு சங்கங்கள் மூலம் குறைந்த வட்டியில் மூலதன கடனுதவி உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக திரு ஆர் காந்தி கூறியுள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தை முன்னோடி மாநிலமாக உருவாக்கும் வகையிலான திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்,

சேலம் மாநகராட்சியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி பேசிய அவர், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நாலாயிரம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

தேர்தல் நேரத்தில் அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் 90 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - ராஜேந்திரன் ) --17---- செகண்ட்*

[]<<<>>>[]

திண்டுக்கல் மாவட்டம் பொருந்தலாறு அணை நிரம்பியதால் பக்தர்கள் புனித நீராடும் சண்முகா நதிக்கு தண்ணீர் திறக்கப்படவுள்ளதால் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

[]<<<>>>[]

தேனி மாவட்டம் பெரியகுளம் அரசு தலைமை மருத்துவமனையில் மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான சிறப்பு முகாம் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டத்தில் தீபாவளி பண்டிகையையொட்டி பட்டாசு விற்பனையாளர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திரு பிரபு சங்கர் தலைமையில் இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

திருப்பூர் மவட்டத்தில் காவல்துறை சார்பில் பணியின்போது உயிர்நீத்த காவலர்கள் மற்றும் ராணுவ வீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில் மாணவ மாணவிகள் பங்கேற்ற மாரத்தான் ஓட்டம் இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் பறிமுதல் செய்யப்பட்ட இரண்டு டன் பான் மசாலா பொருட்களை காவல்துறை மற்றும் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தீ வைத்து அழித்தனர்.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டம் பந்தலூர் பகுதிக்கு கேரளாவிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள காட்டு யானை கூட்டத்தை கண்காணிக்கும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

**[]<<<>>>[]**

ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

மலேசியாவில் நடைபெற்ற நியுசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் இரு அணிகளும் தலா இரண்டு கோல் அடித்த நிலையில் பெனால்டி சூட்-அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது.

இதில் இந்தியா மூன்று - இரண்டு என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கோப்பையை கைப்பற்றியது.

**[]<<<>>>[]**

புனேயில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், நியூஸிலாந்து 113 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் நியுசிலாந்து இரண்டு – பூஜ்ஜியம் என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

***End of News***